வெளியிட்டதற்காகத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் எது ஸ்டாண்டர்டு பத்திரிகை. எது ஸ்டாண்டர்டு பத்திரிகை அல்ல என்று சொல்லமுடியாது. அப்படிச் சொல்வது பத்திரிகை தர்மமும் அல்ல. யாரும் மறுக்கமுடியாதச் செய்திகளை பத்திரிகைகளிலிருந்து எடுத்துக் காட்டினால் ஏற்றுக்கொள்ளலாம். அதை ஏற்றுக்கொள்ள இந்த மன்றம் தயாராக இருக்கிறது. ஆனால் முரணான கருத்துக்களை பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு யாரும் பேசக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது சட்ட மன்றத்தின் 82-வது விதியின்கீழ் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பார்கள்.

(4) அமைச்சர் அறிக்கை

'பி அண்டு சி' மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தமும், அரசு எடுத்துள்ள முயற்சிகளும் குறித்து தொழிலாளர் நல அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : பி அண்டு சி மில் தொழிலாளர்கள் சில நாட்களாக வேலை நிறுத்தம் செய்து வருவதை இம்மன்றம் அறியும். அதன் காரணமாக, அரசு எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக இன்றைய தினம் ஒரு நல்ல முடிவு ஏற்பட்டிருக்கிறது. அதை மன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

சங்க விதி முறைப்படி தொழிற்சங்கத் தலைவர் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு வழி வகுக்கும் முறையில் சென்னை தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. கணபதி அவர்களும் அவரைச் சார்ந்த நிர்வாகிகளும் இன்று காலை பொறுப்புகளிலிருந்து விலகி விட்டதால் விரைவில் சங்கத் தேர்தலை சங்க விதி முறைப்படி நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஊதிய உயர்வு பற்றி நடுவர் தீர்ப்பின்படி தொழிலாளர்களுக்கு இதுவரை தந்திருப்பது போக மீதமுள்ள தொகையை தமிழ் புத்தாண்டு தினத்திற்குள் தந்துவிடுவதாக பி. அண்டு. சி. ஆலை நிர்வாகிகள் உறுதி அளித்திருக்கிறார்கள்.

மற்ற கோரிக்கைகளை சங்கத் தேர்தல் நடைபெற்ற பிறகு, சங்க நிர்வாகிகள் தங்களிடம் கலந்து பேசி, தீர்வு காணுவதற்கும் ஆலை நிர்வாகிகள் இசைந்திருக்கிறார்கள். எனவே, 'பி அண்டு சி' மில் தொழிலாளர்கள் அனைவரும் உடன் வேலைக்குச் செல்லுமாறு தமிழக அரசு கேட்டுக்கொள்கிறது.

திரு. ஜே ஜேம்ஸ் : 42-வது விதியின்கீழ் நான் ஏற்கெனவே இது சம்பந்தமாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது இன்னும் சபாநாயகர் முன்னால் இருந்து

கொண்டிருக்கிறது. ஆனல் அது சம்பந்தப்பட்ட அறிக்கையை இப்பொழுது அமைச்சர் அளித்துவிட்டார்கள். என்னுடைய ஒற்றிவைப்புத் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படாமல், அதற்குரிய அறிக்கையை மட்டும் வெளியிடுவது பொருத்தமாக இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நமது மாநில ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தப்பன் அவர்கள் கொடுத்திருக்கிற நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்தில் நமது நாட்டில் நடந்து முடிந்த இந்தியா பாகிஸ்தான் போரில் நல்லதொரு வெற்றியினை நமக்குத் தேடித் தந்த முப்படைத் தளபதிகளுக்கும், போர் வீரர்களுக்கும், இந்தியத் தலைமை அமைச்சரவர்களுக்கும் எனது நன்றியையும், பாராட்டுதலையும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியா பாகிஸ்தான் போரில் நமது தமிழ் நாடு முழுவதும் மக்கள் ஓரணியாய் நின்று, நல்ல ஒத்துழைப்புத் தந்து, வெற்றிக்கு உறுதுணையாக நின்ற நமது தமிழ் நாடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், தமிழ் நாட்டு மக்களையும் நாம் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

நமது மாநில ஆளுநர் அவர்கள் தமது உரையிலே, நமது தமிழ் நாட்டிலே குறிப்பாக கழக அரசு செய்திருக்கின்ற பல நற்பணிகளை மிகத் தெளிவாக விளக்கிக் கூறியிருக்கின்றார்கள். தமது உரையில் முதலாவதாக விவசாய இலாகாவைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள் 1968-69-ம் ஆண்டில் 50.6 லட்சம் டன் உணவு தானியம் விளைந்தது. ஆனல் 1971-72-ல் 73 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது. இதிலிருந்து தமிழ் நாடு அரசு உணவு உற்பத்தியில் தீவிர கவனம் செலுத்தி வந்திருப்பதை நாம் அறியலாம். இதைப் பார்க்கும்போது எனக்கு ஒரு கவிதை நினைவுக்கு வருகின்றது.

"மாடுகட்டி போரடித்தால் மாளாது செந்நெல்
யானை கட்டி போரடித்த தென்மதுரை".

என்று அந்தக் காலத்தில் பாடிய இந்த கவிதையை இங்கே குறிப்பிடுவது மிகப் பொருத்தமாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்று யானை கட்டி